# ஸ்ட்ரெயிட் ஸ்டிச்













வாழ்த்துகள் ! இந்த வீடியோவைப்பார்க்க உங்களை வரவேற்கிறோம்.இதிலே,உஷா ஸ்ட்ரெயிட் ஸ்டிச் சூயிங் மெஷின் பத்தி எல்லா விஷயங்களையும் நீங்க கத்துக்கப்போறீங்க. இது எங்களுடைய ரேஞ்ச்-லே ரொம்ப சிம்பிள் -ஆன மெஷின்.இதிலே மாஸ்டர் பண்றது ரொம்ப சுலபம்.

இந்த வீடியோவை கவனமா பாருங்க.ஆரம்பத்திலே கொஞ்சம் குழப்பமா தெரியலாம்.ஆனா, நான் சொல்றதை நம்புங்க, நீங்க சீக்கிரமாவே, மாஸ்டர் பண்ணிடுவீங்க,. சரி, நாம இதை ஆரம்பிக்கலாமா ?

பாபின்-ஐ, எப்படி வைண்ட் பண்றதுன்னு நான் உங்களுக்கு சொல்லித்தரேன்.நான் சொல்ற படியே செய்யுங்க. பாபின் கேஸ்-லே இருந்து நாம ஆரம்பிக்கலாம்.


ஸ்லைட் ப்ளேட்-ஐ ஓபன் பண்ணுங்க. பாபின் கேஸ்-ஐ- எடுத்திடுங்க.அடுத்து, பாபின் கேஸ் -லே இருந்து,பாபின்-ஐ எடுத்துடுங்க.

நூலை ஸ்பூல்லே இருந்து, இழுத்து,பாபின் வைண்டர் டென்ஷன் ப்ராக்கெட்-ஐ சுத்தி கொண்டுவாங்க.பாபினை, பாபின் வைண்டர் ஸ்பிண்டில்-லே, இந்த மாதிரி வையுங்க.அடுத்து,பாபினை ஹோல்ட் பண்றதுக்கு பாபின் வைண்டர் லேட்ச்- ஐ, அழுத்துங்க.

பாலன்ஸ் வீலை, உங்க இடது கையாலே பிடிச்சுகிட்டு,நான் செய்யற மாதிரி,ஸ்டாப் மோஷன் -ஐ லூஸ் பண்ணுங்க.இது,ஃப்ளை வீல்-லே இருந்து மெஷினை, டிஸ்கனெக்ட் பண்ணிடும்.







இப்போ மெஷின் -ஐ ஸ்டார்ட் பண்ணுங்க.பாபின் -லே, நூல் நிறைஞ்சிடுன்னா,அது தானாவே நின்னுடும் நூலை, கட் பண்ணிடுங்க. நூல் நிறைச்ச பாபினை எடுத்துட்டு. ஸ்டாப் மோஷன்-ஐ, டைட் பண்ணுங்க.இப்போ, பாபின் -ஐ, இந்த மாதிரி பாபின் கேஸ்-லே வையுங்க.இங்கே நூல்,க்ளாக்வைஸ் டைரக்ஷன் -லே வரணும்-ங்கறதை உறுதிபடுத்திக்கங்க. நூலை,பாபின் கேஸ் ஸ்லாட்-க்குள்ளே கொண்டுவாங்க.அப்புறம் டென்ஷன் ஸ்ப்ரிங்-க்கு கீழே கொண்டுவந்து, டெலிவரி 'ஐ'-க்குள்ளே கொண்டு வாங்க,10 செ. மீ அதாவது, 4-அங்குல அளவுக்கு நூல் வெளியிலே இருக்கட்டும்.

அடுத்து, நூல் நிறைக்கப்பட்ட பாபின் இருக்கிற பாபின் கேஸ்-ஐ , ஷட்டில்லே, எப்படி வைக்கறதுன்னு பார்க்கலாம்.பாபின் கேஸ்-ஐ,ஷட்டில் ரேஸ்-லே நேரா வையுங்க. பாபின் கேஸ் ஸ்டாப்பர்,அந்த ஸ்லாட்-லே சரியா பொருந்தியிருக்கான்னு பார்த்துக்கங்க. பாபின் கேஸ் க்ளட்ச்-ஐ ரிலீஸ் பண்ணீங்கன்னா பாபின் கேஸ்- சரியா பொருந்திடும்.









இப்போ, மெஷின் தைக்கறதுக்கு தயாராகறதுக்கு முன்னே,நமக்கு இன்னும் ஒரே ஒரு ஸ்டெப் தான் இருக்கு மெஷினை எப்படி த்ரெட் பண்றதுன்னு, கத்துக்கலாம்.

பாலன்ஸ் வீலை- உங்க பக்கம் திருப்பி, த்ரெட் டேக் அப் லீவர்-ஐ, , இந்த மாதிரி அதனுடைய அதிக பட்ச உயரத்துக்கு தூக்குங்க. அடுத்து, ப்ரெஸ்ஸர் ஃபுட்-ஐ, தூக்குங்க.

ஃபேஸ் ப்ளேட்-மேலே,இருக்கிற த்ரெட் கைடு-வழியா, நூலை கையிலே பிடிச்சுகிட்டே, இந்த மாதிரி, கீழே, த்ரெட் டென்ஷன் யூனிட்-க்கு, கொண்டுவாங்க.
இந்த இடத்திலே, செக் ஸ்ப்ரிங் வழியா நூலை கொண்டுவாங்க. அப்புறம்,நான் செய்யற மாதிரி,நூலை,த்ரெட் டேக் அப் லீவர்-க்குள்ளே பின்னாலே இருந்து முன்பக்கம் நுழைச்சு, கொண்டுவாங்க.



அடுத்து, இந்த மாதிரி, ஃபேஸ் ப்ளேட் த்ரெட் கைடு- வழியா நூலைக்கொண்டு வாங்க.அப்படியே கீழே கொண்டுவந்து, நீடில் பார் த்ரெட் கைடு-க்குள்ளே நுழையுங்க.இப்போ கடைசி ஸ்டெப்-,நூலை ஊசிக்குள்ளே, இடது பக்கத்திலே இருந்து வலது பக்கம் வர்ர மாதிரி நுழையுங்க.

ஊசியிலே இருந்து வர்ர நூலைக் கையிலே பிடிச்சுக்கங்க.ஃப்ளை வீல்-ஐ, திருப்பி. ஊசி முழுசா நீடில் ப்ளேட்-க்கு,கீழே போற மாதிரி செய்யுங்க,ஊசி மறுபடியும் மேலே வர்ர வரைக்கும், ஃப்ளை வீல்-ஐ, திருப்பிகிட்டே இருங்க.பாபின் -லே இருக்கிற நூல் வெளியிலே வர்ரதுக்கு ஊசியிலே இருக்கிற நூலை, இழுங்க.



மேல் நூலுக்கான த்ரெட் டென்ஷன்-ஐ, இப்படி தான் அட்ஜஸ்ட் பண்ணனும். த்ரெட் டென்ஷன் நாப்-ஐ, லூஸ் டென்ஷன்-க்கு இப்படியும்,டைட் டென்ஷன்-க்கு இப்படியும் மூவ் பண்ணனும். இது .தையல்- னுடைய , ஃபைனல் ஃபினிஷ் சரியா அமையறதிலே,இதுக்கு முக்கிய பங்கு இருக்கு. த்ரெட் டென்ஷன் சரியா இருக்கணும்.அது லூசா இருந்ததுன்னா.ஒவ்வொரு தையல்லே-யும் , அதிகப்படியான நூல் வெளியிலே வந்துடும்,அது, பார்க்க நல்லா இருக்காது. ரொம்ப இறுக்கமா இருந்ததுன்னா, நூல் அறுந்து போகும்.



இங்கே இருக்கறது, ஸ்டிச் ரெகுலேட்டர் நாப்.அது தையல் நீளம், எவ்வளவு இருக்கணும்-ங்கறதை, தீர்மானிக்கறதுக்கு, உதவி செய்யுது நாப்-ஐ, கீழ் வரைக்கும் இழுக்கும் போது,ரிவர்ஸ் ஸ்டிச்சிங்- பண்ண முடியும்.

இனி, ஊசியை எப்படி மாத்தறதுன்னு பார்க்கலாம்.



ஊசியை மாத்தறதுக்கு, நீடில் க்ளாம்ப் ஸ்க்ரூ-வை, லூஸ் பண்ணனும்.ஊசியைக் கீழே இழுக்கணும்.வீட்டிலே தைக்க பயன்படற மெஷின்கள்-லே,ஊசியினுடைய தலைப்பாகம்,ஒருபக்கம் தட்டையாவும், இன்னொரு பக்கம், உருண்டையாவும் இருக்கும்.ஊசியை மெஷின் -லே ஃபிக்ஸ் பண்ணும் போது,தட்டையான பகுதி,நீடில் பார்-ஐ பார்த்த மாதிரி இருக்கணும்-ங்கறதை,உறுதிப்படுத்திக்கணும்.

அடுத்து, எப்படி ஷட்டிலை சுத்தப்படுத்தறதுன்னு, உங்களுக்கு சொல்லிக்கொடுக்கிறோம்.



ஸ்லைட் பிளேட்-ஐ தூக்கி,ஷட்டில் ரேஸ்-லே இருந்து,பாபின் கேஸ்-ஐ, எடுத்துடணும். ஷட்டில்-ஐ, வெளியிலே எடுக்கறதுக்கு, ஷட்டில் க்ளாம்ப்ஸ்-ஐ திருப்பணும்.

ஷட்டில் ரேஸ்-ஐ, மிருதுவான துணியாலே துடைச்சிட்டு, ஷட்டில்-ஐ, அதிலே வெச்சிடணும்.


ஷட்டில் ஹூக் ரிங்-லே இங்கே ஒரு நாட்ச் இருக்கு. ஷட்டில் ரிங், ஸ்மூத்-ஆ, ஸ்லைட்-ஆகி போகணும்-னா,அது, ஷட்டில் ரேஸ்-லே இருக்கிற பள்ளத்தோட பொருந்தியிருக்கணும்.











ஷட்டில் ரேஸ்-ஐ மூடறதுக்கு, க்ளாம்ப்ஸ்-ஐ திருப்பணும். பாபின் கேஸ்-ஐ, உள்ளே வெச்சிட்டு ஸ்லைட் பிளேட்-ஐ, மூடணும்.

கடைசியா,மெஷின் நல்லா ஸ்மூத்-ஆ வேலை செய்யறதுக்கு, நீங்க, அப்பப்போ, மெஷினுக்கு ஆயில் போடணும்.

ஆக்ஸஸரி பாக்ஸ்-லே, ஒரு ஆயில் பாட்டில் இருக்கும், இது உங்க ஸ்ட்ரெயிட் ஸ்டிச் தையல் மெஷின் கூடவே வருது.இப்போ காட்டற மாதிரி மார்க் பண்ண துளைகள்-லே தான் ஆயில் விடணும்.

வாரத்துக்கு ஒரு முறை தான் நீங்க மெஷினை யூஸ் பண்றீங்கன்னா,மாசத்துக்கு ஒருமுறை ஆயில் போடுங்க.மாசத்துக்கு ஒரு முறை தான் யூஸ் பண்றீங்கன்னா,மூணு மாசத்துக்கு ஒரு முறை ஆயில் போடுங்க.

இந்த மெஷின்கள் வேற பல விதங்கள்-லே, அழுத்தமான பேஸ், கவர் - இதோட கூட வருது.கையாலே, இயக்கக்கூடியதா இருக்கு., இது,உஷா உமங் காம்போசிட் சூயிங் மெஷினை விரும்பறவங்களுக்கானது.--கையாலேயும், காலாலேயும் இயக்கக்கூடியது.

இந்த பாடம் உங்களுக்குப்பிடிச்சிருக்கும்-னு நினைக்கறோம்.